2015 செப்டம்பர் 23] [பேரவைத் தலைவர்]

*வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குப் பின்னால், மற்ற உறுப்பினர்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதை நீங்கள் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் வெளிநடப்பு செய்வது என்பது ஒரு சதவீதம்கூட நியாயம் இல்லாத செயல் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

## 5. அரசினர் தனித் தீர்மானம்

### சென்னையில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி, இலக்கை விஞ்சி முதலீட்டினை ஈர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு பேரவை வாழ்த்து தெரிவித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்ணவும் நேரமில்லா உழைப்பு, உறங்கவே நினையாத விழிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) தனக்காக ஏதுமின்றி, தமிழர்களுக்காகவே வாழ்கின்ற துடிப்பு, (மேசையைத் தட்டும் ஒலி) ஏறெடுத்துப் பார்க்கும் பார்வையும், ஏனென்று கேட்கும் கேள்வியும், உதட்டில் இருந்து உதிரும் வார்த்தையும், உள்ளத்தில் ஒலிக்கும் வேட்கையும், வாள் எடுத்து வீசும் வீச்சும், வானிடியாய் பேசும் பேச்சும், வளையா செங்கோலும், வாரித் தரும் பொற்கரமும், தனக்காக எதுவுமின்றி, எல்லாமே தமிழருக்கே என்று வாழும் வள்ளலே! (மேசையைத் தட்டும் ஒலி) செல்வச் செழிப்பில் உதித்து, அறிவூட்டும் பள்ளியிலே படித்து, பாடங்கள் அனைத்திலும் முதலிடமே வகித்து, (மேசையைத் தட்டும் ஒலி) கூர்மதியில் செழித்து, பேரறிவில் திளைத்து, கழகம் என்னும் பொக்கிஷத்தைக் கட்டிக் காத்து, எத்தர்கள் ஏவிய எண்ணில்லா கணைகளை எதிர்த்து, தகர்த்து, புறமுதுகு காட்டாத போர்க்களங்கள் கண்டு, (மேசையைத் தட்டும் ஒலி) வரலாறும் வாய் பிளக்கும் வாகைகளை வரிசையாய்க் கொண்டு, அதிசயமே*

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 23

வடிவான அன்னையே, ஓராயிரம் எதிரிகள் ஓரணியில் திரண்டாலும், புறமுதுகிட்டு ஓடச் செய்து, போர்க்கொடி நாட்டி, புண்ணிய பூமி காக்க வந்த சிங்கநிகர் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) வான் மழை பொய்த்தாலும் வாரித் தரும் வள்ளலே, தாய் மனம் பொய்க்காது என்று அள்ளித் தரும் அட்சயமே, திரும்பும் திசையெல்லாம தீபமாக நின்று, காணும் திசையெல்லாம் கருணை மழை பொழிந்து வரம் அளிப்பவரே! இமயத்தைப் பணிய வைக்கும் துணிவும், இல்லார்க்கு வாழ்வளிக்கும் கனிவும், தொண்டர்களை வாழ வைக்கும் ஈரமும், துரோகிகளை வீழ்த்துகின்ற வீரமும், நெருப்பாற்றில் நீந்துகின்ற தீரமும், நினைத்ததை முடிக்கின்ற நெஞ்சின் உரமும் ஒருசேரப்பெற்ற (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.

*பிற்பகல் 12—25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதன்முறையாக தமிழ்நாட்டில் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு கடந்த 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் பாங்குற நடைபெற்றதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இதற்கு வித்திட்டதோடு மட்டுமல்லாமல், இந்த உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு குறித்த ஒவ்வொன்றைப் பற்றியும் நுணுக்கமாக ஆராயந்து, அறிவுரைகளை அவ்வப்போது வழங்கியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பெருமுயற்சியின் காரணமாகவே ஒரு இலட்சம் கோடி முதலீடு என நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட இரண்டு மடங்குக்கும் அதிகமாக அதாவது, 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. இன்று தமிழ்நாட்டில் மிக அதிகளவிலான ஆலைகள் உள்ளன. தொழிற்சாலைகளில் 20 இலட்சம் பேர் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளனர். தொழிற்சாலைகளில் வேலைபுரிவோர் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது. புதிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் எண்ணிக்கையில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.

2015 செப்டம்பர் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக 1991 ஆம் ஆண்டு பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் தனி நபர் வருமானம் தேசிய சராசரியைவிட குறைவாகவே இருந்தது. ஆனால், இன்றோ தமிழகத்தில் தனி நபர் வருமானம் தேசிய சராசரியைவிட ஒன்றரை மடங்கு அதிகமாகவே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது பெரிய மாநிலமாக விளங்குகிறது.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் ஏற்றுமதியில் இரண்டாம் இடத்தில் தமிழகம் உள்ளது. பொருளாதாரம், தொழில் வளர்ச்சி, ஒட்டுமொத்த உட்கட்டமைப்பு, மின்சாரம், சாலை வசதி, சுகாதாரம், தனி நபர் வருமானம் மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆகிய 9 இனங்களில், 8 இனங்களில் மிகச் சிறந்த செயல்பாடு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது என (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த பிப்ரவரி மாதம் ASSOCHAM வெளியிட்ட ஒப்பீட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சியில் தமிழகம் இந்த அளவு முன்னேற்றம் அடைந்திருப்பதற்கு முக்கியக் காரணம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதன்முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது தொழிற்புரட்சி ஏற்படுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுதான். முதன்முதலாக தமிழ்நாட்டில் தொழில் கொள்கை ஒன்றை 1992 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வெளியிட்டு நடைமுறைப்படுத்தியதே இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் வியத்தகு வளர்ச்சிக்கு அடிப்படை. அந்தத் தொழில் கொள்கை காரணமாகத்தான் ஃபோர்டு மற்றும் ஹூண்டாய் நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது முதல் உற்பத்தித் தொழிற்சாலையினை தமிழகத்தில் தொடங்கின. இந்த நிறுவனங்கள் தங்கள் மாநிலத்தில் தொழிற்சாலையை நிறுவிட வேண்டுமென பல்வேறு மாநிலங்களிடையே கடும் போட்டி இருந்தபோது, இந்த நிறுவனங்கள் தமிழகத்தில் தொழிற்சாலைகளை நிறுவ முழுமுதற் காரணமானவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 23

இதன்காரணமாக தமிழகத்தில் மோட்டார் வாகன நிறுவனங்களுக்கு உதிரிப் பாகங்கள் வழங்கும் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் அமையப்பெற்றன. மேலும், பல மோட்டார் வாகன நிறுவனங்கள் தங்கள் உற்பத்தித் தொழிற்சாலைகளை தமிழ்நாட்டில் அமைத்த காரணத்தால் இன்று நிமிடத்திற்கு 3 கார்கள் உற்பத்தி செய்யும் மிகப் பெரிய மோட்டார் வாகனங்கள் உற்பத்தி கேந்திரமாக தமிழ்நாடு திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவில் உற்பத்தியாகும் மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரி பாகங்களில் 30 சதவிகிதம் தமிழ்நாட்டில்தான் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தியாவில் மோட்டார் வாகனங்களின் ஏற்றுமதியில் 70 சதவிகிதம் தமிழகத்திலிருந்துதான் மேற்கொள்ளப்படுகிறது.

2003–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய தொழில் கொள்கை காரணமாகத்தான் தமிழகத்தில் மின்னணு சாதனங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் மிகப்பெரும் எண்ணிக்கையில் அமைய வழிவகை ஏற்பட்டது. Samsung, Flextronics, Sanmina போன்ற உலக பெரும் நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலைகளை தமிழகத்தில் தொடங்கின. மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் தமிழகம் முதலிடம் பெறுவதற்குக் காரணம், இந்தத் தொழில் கொள்கையும், அதன்பயனாக புதிய நிறுவனங்கள் தொடங்கப்பட்டதுமேயாகும்.

பிற்பகல் 12–30

2014 ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதிய தொழில் கொள்கையை வெளியிட்டார்கள். தொழில் வளர்ச்சி, மாநிலம் முழுவதும் பரவலாக அமையும்வண்ணம் தென் மாவட்டங்களுக்கென சிறப்புச் சலுகைகளையும் அறிவித்தார்கள். மேலும், மோட்டார் வாகனங்கள் மற்றும் உதிரிப் பாகங்கள் கொள்கை மற்றும் உயிரி தொழில்நுட்பக் கொள்கை ஆகியவற்றையும் வெளியிட்டார்கள். தமிழ்நாட்டில் கடந்த நான்காண்டுகளில் அதிக எண்ணிக்கையில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டதனால் எண்ணற்ற வேலைவாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் (Employees Provident Fund Organisation) விவரப்படி 31–3–2011–ல் தமிழ்நாட்டில் இந்நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 21 ஆயிரத்து 904 ஆகும்.

2015 செப்டம்பர் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

31-3-2015-ல் தமிழ்நாட்டில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 87 இலட்சத்து 57 ஆயிரத்து 717 ஆக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, கடந்த 4 ஆண்டுகளில் தமிழகத்தில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 3 இலட்சத்து 36 ஆயிரத்து 813 ஆகும். இது கடந்த 5 ஆண்டு தி.மு.க. ஆட்சியில் E.P.F. பயனுடன் உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பினைவிட 3 மடங்கிற்கும் அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இதுவன்றி E.P.F. தகுதியில்லாத வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆனால், இதுபற்றிய புள்ளிவிவரங்கள் எந்த நிறுவனத்தாலும் சேகரிக்கப்படுவதில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையின்படி, 2014 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழகத்தில் முதன்முறையாக உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் பிரான்ஸ், ஆஸ்திரேலியா, ஜப்பான், கொரியா, கனடா, இத்தாலி, சிங்கப்பூர், ரஷ்யா மற்றும் (United Kingdom) பிரிட்டன் ஆகிய 9 நாடுகள் பங்கேற்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் பங்கேற்றனர். இதுதவிர, வெளிநாடு மற்றும் உள்நாட்டைச் சார்ந்த 23 அமைப்புகள் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில் பங்கேற்றன. இந்தியாவிலிருந்து மட்டும் 4 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் பங்கேற்றனர். செப்டம்பர் 10 ஆம் தேதி 98 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. அவற்றின்மூலம் தமிழகம் பெறக்கூடிய முதலீடு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இவற்றின்மூலம் ஏறத்தாழ 4 இலட்சத்து 70 ஆயிரத்து 65 நபர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைத்திடும். (மேசையைத் தட்டும் ஒலி) 10,073 குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் தனித் தனியே மாவட்ட தொழில் மையங்கள்மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டன. இந்த முதலீட்டாளர்கள் சந்திப்பு பற்றி கருத்து தெரிவித்துள்ள ஒரு சிலர், இந்த மாநாடு 2011 ஆம் ஆண்டே நடத்தப்பட்டிருக்க வேண்டுமென்ற ஒரு கருத்தைத் தெரிவித்து வருகின்றனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது தமிழகத்தில் எத்தகைய கடுமையான மின்வெட்டு நிலவி வந்தது என்பதை மாண்புமிகு

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 23

*உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவர். வீடுகளுக்கே பல மணி நேரம் மின்வெட்டு நிலவி வந்த சூழ்நிலையில், எவரேனும் இங்கே தொழில் தொடங்க முன்வருவார்களா? அல்லது அவ்வாறு முன்வந்தால்கூட அவர்களுக்குப் போதிய மின்சாரம் வழங்கிட இயலுமா? அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக இருந்தால்தானே தொழில்முனைவோரை தொழில் தொடங்க நாம் அழைக்க இயலும். அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுள் முக்கியமாகத் திகழ்வது மின்சாரம்தானே! கடந்த 4 ஆண்டுகளில் 6,240 மெகா வாட் அளவு மின் உற்பத்தித் திறன் கட்டமைப்புடன் சேர்க்கப்பட்டுள்ளது. எனவேதான், தற்போது கடுமையான மின் பற்றாக்குறை மாநிலம் என்ற நிலையிலிருந்து, தேவையான மின்சாரம் கிடைக்கப்பெறும் மாநிலம் என்ற நிலையை தமிழகம் எய்தியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கான முழு பொறுப்பும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*2010–2011 ஆம் ஆண்டு, நாள் ஒன்றுக்கு 200 மில்லியன் யூனிட் மின்சாரம் மட்டுமே வழங்கி வந்த நிலையில், கடந்த ஆண்டு நாளொன்றுக்கு 260 மில்லியன் யூனிட் வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அதாவது, 30 சதவிகிதம் அளவிற்குக் கூடுதல் மின்சாரம் வழங்கப்படுகிறது. எனவேதான், 2013–2014 ஆம் ஆண்டில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 4.74 சதவிகிதம் என்றிருந்த நிலையில், தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 7.24 சதவிகிதம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற உயர் அளவாக இருந்தது. பெரிய தொழில் நிறுவனங்கள் மட்டுமல்லாது, சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் உருவானதிலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.*

*பிற்பகல் 12–35*

*2013–2014 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிதாகத் தொடங்கப்பட்ட சிறு மற்றும் குறு நிறுவனங்களின் எண்ணிக்கை*

*. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . –2015–ல்*

*ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 104 ஆக உயர்ந்துள்ளது. இதன்மூலம் இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைத்துள்ளது என்பதுதான் மறுக்க இயலாத உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், ரிசர்வ் வங்கி அந்நிய நேரடி*

2015 செப்டம்பர் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

முதலீடுகள் குறித்த புள்ளிவிவரங்களை அவ்வப்போது வெளியிடுகிறது. 2000 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தமிழகத்திற்கு இவ்வாறு கிடைக்கப்பெற்ற அந்நிய நேரடி முதலீடு ரூ.93,725 கோடி ஆகும். இத்தொகை 2000 ஆம் ஆண்டு முதல் ஏப்ரல் 2011 வரை ரூ.33,105 கோடியாக மட்டுமே இருந்தது. மே 2011 முதல் மே 2015 வரையில் வரப்பெற்ற அந்நிய நேரடி முதலீடு சுமார் ரூ.60,620 கோடி ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, 10 ஆண்டுகளில் பெறப்பட்ட அந்நிய நேரடி முதலீடுகளைவிட ஏறத்தாழ 2 மடங்கு அதிகமான முதலீடுகளை நான்கே ஆண்டுகளில் பெறச் செய்து, சாதனை படைத்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தற்போது அந்நிய நேரடி முதலீட்டில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது. CMIE என்ற நிறுவனம் மொத்த முதலீடுகளின் புள்ளிவிவரங்களைத் தொகுத்து அளித்து வருகிறது. அதன்படி ஏப்ரல் 2011 முதல் ஜூன் 2015 வரை தமிழகம் ஈர்த்துள்ள கூடுதல் முதலீடு ரூ.2,61,709.99 கோடி ஆகும்.

Federation of Indian Export Organisation (FIEO) தந்துள்ள புள்ளிவிவரங்களின்படி 2010–2011 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்கு 9 சதவிகிதமாகத்தான் இருந்தது. இது 2014–2015 ஆம் ஆண்டில் 11.58 சதவிகிதமாக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரை, எந்த நேரத்தில், எதைச் செய்ய வேண்டும் என்பதை மிகவும் ஆழ்ந்து சிந்தித்து, அறிவித்து, செயல்படுத்தக்கூடியவர் என்பதை நாடு நன்றாகவே அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) 2012 ஆம் ஆண்டில் 'விஷன் தமிழ்நாடு 2023' என்ற தொலைநோக்குத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். முந்தைய ஆட்சி விட்டுச்சென்ற கடுமையான மின் பற்றாக்குறையை நீக்கியும், நிதி நிலையைச் சரிசெய்தும், உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியும் தமிழகத்தை முதலீட்டுக்கு ஏற்ற மாநிலமாக மாற்றிய பின்னர், முதலீட்டாளர்களை அழைத்து சந்திப்பு நடத்துவதுதான் உகந்ததாக இருக்கும் என்பது எவருக்கும் எளிதில் புரியக்கூடியதுதான். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 23

புதிய தொழில் கொள்கைகளாலும், தொலைநோக்குத் திட்டங்களாலும், மின்சார உற்பத்தியைப் பெருக்கியதாலும், ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு சரியான நிதி ஆதாரங்களை வழங்கி தொடங்கியதாலும் இன்று வெளிநாடு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களிடையே பெரும் நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டு, வரலாறு காணாத தொழில் வளர்ச்சிக்கு அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், இதுபோன்ற உலகளவிலான சந்திப்பு தமிழ்நாட்டில் முதன்முறையாக நடைபெறுகிறது. பல்வேறு நாடுகளுக்குச் சென்று, இதற்காக தொழில்முனைவோர் முன் ஆயத்தக் கூட்டங்களை நடத்தி, தமிழகத்தைப் பற்றி உலகளவில் அறியச் செய்வதற்கும், ஏனைய ஆயத்தப் பணிகளை மேற்கொள்ளவும் கடந்த ஓராண்டாக பணிகள் நடைபெற்று வந்தன. அதன் பயனாகத்தான் 9 நாடுகள் இச்சந்திப்பில் தங்களையும் இணைத்துக் கொண்டன. இவைதவிர அமெரிக்கா, தைவான், ஜெர்மனி, சீனா, மலேசியா, துருக்கி போன்ற நாடுகளிலிருந்தும் வர்த்தக அமைப்பின் பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு முதலீடுகளுக்கு உறுதியளித்துள்ளார்கள். தைவான் நாட்டிலிருந்து வந்துள்ள பெரும் மின்னணு நிறுவனங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன.

பிற்பகல் 12–40

ஏற்கெனவே தமிழ்நாட்டில் இயங்கிவரும் M.R.F., T.V.S., J.S.W., Apollo Tyres, Saint Gobain, Amway, தைவான் நாட்டைச் சேர்ந்த காலணி நிறுவனம், TAFE, SPIC, Samsung போன்ற பல நிறுவனங்கள் தங்களது விரிவாக்கத் திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2012 ஆம் ஆண்டில் வெளியிட்ட சூரிய மின் உற்பத்திக் கொள்கை காரணமாக solar energy உற்பத்திக்கு 5,345 மெகா வாட் அளவிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இந்த உலக முதலீட்டாளர்கள் சந்திப்பில் கையெழுத்திடப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த மதிப்பு 35,356 கோடி ரூபாயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) வரலாற்றுச் சிறப்புமிக்க உலகத் தொழில் முதலீட்டாளர்கள் சந்திப்பு மிகவும் வெற்றிகரமாக நடைபெற்றதற்கும், (மேசையைத் தட்டும் ஒலி) 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகள் உறுதி செய்யப்பட்டதற்கும் முழுமுதற் காரணமான மாண்புமிகு

2015 செப்டம்பர் 23] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

தமிழ்நாடு முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுவது நம் கடமை என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசின் சார்பில் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

## தீர்மானம்

"தொழில்கள் வளர வேண்டும்; தொழிலாளர்கள் வாழ வேண்டும்; அதன்மூலம் பொருளாதாரத்தில் தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ வேண்டும்" என்ற லட்சியத்தை அடையும் வகையில், 'மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பது போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெற வேண்டும்' என்ற பேரறிஞர் அண்ணாவின் சிந்தனையை மனதில் நிறுத்தி, மக்கள் பலன் பெறும் வண்ணம் தனது தொலைநோக்குப் பார்வை, நுண்மான் நுழைபுலம், இயற்கையான மதிநுட்பம், சீரான திட்டமிடல், அறிவாற்றல், ஆற்றல்மிகு செயல்பாடு ஆகியவற்றின்மூலம், உலகமே வியக்கும் வண்ணம், சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டினை இம்மாதம் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில் சென்னையில் நடத்தி, அதன்மூலம் தொழில் துறை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கத்தக்க சாதனையை புரிந்த;

சர்வதேச முதலீட்டாளர்கள் சந்திப்பின்மூலம், 15–க்கும் மேற்பட்ட அயல் நாடுகளிலிருந்தும், ஏனைய மாநிலங்களிலிருந்தும் 5,000–க்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களை பங்குபெறச் செய்து, 1 இலட்சம் கோடி ரூபாய் என நிர்ணயிக்கப்பட்ட இலக்கினை விஞ்சி, தமிழகத்திற்கு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் அளவிலான முதலீட்டினை ஈர்த்து, (மேசையைத் தட்டும் ஒலி) அதன்வாயிலாக, 4 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதை உறுதி செய்த; (மேசையைத் தட்டும் ஒலி)

வலிமையான, வளமான தமிழகத்தை உருவாக்கிடும் வகையில், தொழிற்புரட்சிமூலம் ஒட்டுமொத்தத் தமிழர்களின் வாழ்விலும், தமிழகப் பொருளாதாரத்திலும், அதன்மூலம் இந்தியப் பொருளாதாரத்திலும் மிகப்பெரிய மாற்றத்தை, மறுமலர்ச்சியை, ஏற்றத்தை ஏற்படுத்த, வழிவகுத்த;

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2015 செப்டம்பர் 23

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், சரித்திரத் தாய், ஏழைகளின் ஏந்தல், (மேசையைத் தட்டும் ஒலி) பொருளாதார மேதை, சிந்தனைச் சிற்பி, இதய தெய்வம் புரட்சித் தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தனது நன்றியினையும், பாராட்டினையும் தெரிவித்து பெருமிதம் கொள்வதோடு, இதுபோன்ற சாதனைகள் தொடர வேண்டுமென்று மனதார வாழ்த்தி மகிழ்கிறது." (மேசையைத் தட்டும் ஒலி)

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவித்த பின்னர், இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) வரிசையாக நான் உங்களைக் கூப்பிடுகிறேன். இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் இப்போது முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களைப் பேச அழைத்திருக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும்போது நீங்கள் பேசுங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான், உங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கும்போது நீங்கள் பேசுங்கள். இப்போது நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நான் உங்களுக்குப் பேச வாய்ப்புக் கொடுக்கும்போது நீங்கள் பேசுங்கள். இப்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றும் கிடையாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். . . . . . (குறுக்கீடுகள்) இம்மாதம் 9 மற்றும் 10 ஆகிய நாட்களில்

2015 செப்டம்பர் 23] [முனைவர் செ.கு. தமிழரசன்]

சென்னையில் நடைபெற்ற உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, (குறுக்கீடுகள்) தமிழகத்திற்கு ரூபாய் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடியை முதலீடாகப் பெற்றுத் தந்திருக்கிற போற்றுதலுக்குரிய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதனையைப் பாராட்டி, நன்றி தெரிவிக்கின்ற இந்த அரசினர் தீர்மானத்தை நான் வழிமொழிந்து வரவேற்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 12–45

இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தவரையிலே, செயல், சாதனை, மரபு என்ற மூன்று கூறுகளாக அதை நான் பார்க்க விரும்புகிறேன். செயல் என்கின்ற வகையிலே, உறுதியாக இந்த மாமன்றத்திலே இத்தகைய அரசினர் தனித் தீர்மானத்தைக் கொண்டு வருவது மிக மிக அவசியம் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக இத்தகைய உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு ஒன்று நடக்கிறது என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சியால், (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 9, 10 ஆம் தேதிகளிலே சென்னையில் நிகழ்ந்த இந்த மாநாடுதான். அதுவும், தமிழக தொழில் துறை வரலாற்றிலே முதன்முறையாக நிகழ்ந்திருக்கிறது. முதன்முறையாக ஒரு மரபு, ஒரு நடவடிக்கை, ஒரு செயல் உருவாக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னால், அந்த உருவாக்கம் தமிழகத்தினுடைய நலன் கருதி, தமிழகத்தினுடைய எதிர்காலம் கருதி, தமிழக வெகுமக்களுடைய வளம் கருதி, இத்தகைய நடவடிக்கை நிகழ்ந்திருக்கிறதென்று சொன்னால், அதை இந்த மாமன்றம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவேதான் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்திலே மட்டுமல்ல, உலகளாவிய எந்த முதல் சிந்தனையும் பாராட்டப்படுமானால்தான் அந்த சிந்தனையின்மூலம் மக்கள் சமுதாயம் பலன் பெற முடியும். கொலம்பஸ் ஆனாலும், யுவான் சுவாங் ஆனாலும், ஏன், கற்காலத்திலே ஏரை கண்டுபிடித்தவன்; ஏருக்குப் பின்னாலே அடுப்பைக் கண்டுபிடித்தவன்; அகல் விளக்கைக் கண்டுபிடித்தவன்; இவர்களெல்லாம் பாராட்டப்படாமல் தவிர்க்கப்பட்டிருப்பார்களேயானால், இன்றைக்கு இந்த மின்னணு உலகம் வந்திருக்காது. வேளாண்மைச் சமுதாயம் வந்தது;

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2015 செப்டம்பர் 23

வேளாண்மைச் சமுதாயத்திற்குப் பிறகு உலோகச் சமுதாயம் வந்தது; உலோகச் சமுதாயத்திற்குப் பிறகு தொழில் சமுதாயம் வந்தது; தொழில் சமுதாயத்திற்குப் பிறகு மின் சமுதாயம் வந்தது; இன்றைக்கு மின்னணு சமுதாயம் உலகிலே தோன்றியிருக்கிறது.

ஒரு விஞ்ஞானி சொல்கிறான், "4-வது உலகப் போர் நிகழுமா? நிகழ்ந்தால், எப்படி இருக்கும்" என்று கேட்டால், "4-வது உலகப் போரிலே மனிதர்கள் பங்கேற்க மாட்டார்கள், ஆனால் மனித சமூகம் பேரிழப்பைச் சந்திக்கும், மனித சமூகம் முற்றிலுமாக அழிந்துபோகும்" என்று.

ஆக, இந்த மின்னணு சமுதாயத்திலே வாழ்ந்து கொண்டிருக்கிற நாம், 10 கோடி தமிழர்களை ஒரு பேரினமாய், தொன்றுதொட்ட ஒரு தமிழினமாய், பெருமை பெற்ற தமிழினமாய் இருக்கிற நாம், இந்தத் தமிழகத்தினுடைய வளர்ச்சிக்காக, மிகப் பெரிய அர்ப்பணிப்புக்காக ஒரு முதல் மாநாட்டை நடத்தியிருக்கிறோம். அதுவும், எத்தகைய சூழ்நிலையிலே நடத்தியிருக்கிறோமென்று சொன்னால், "ஏன் இந்த மாநாடு அறிவிப்போடு நிற்கிறது? எதற்காக காலதாமதம்? ஏன் நடத்தப்படவில்லை? ஏன் இன்னமும் அதற்கான சூழ்நிலை வரவில்லை? அறிவிப்பு தள்ளிக்கொண்டே போகிறதே? ஏன் நடத்தவில்லை? ஏன் நடத்தவில்லை?" என்று கேட்கப்பட்ட சூழ்நிலையிலே நடத்தியிருக்கிறோம். மாநாட்டை நடத்திய பின்னாலே, "ஆஹா! இது வெறும் மாநாடா? வெற்று விளம்பரமா?" என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள்.

ஒரு இலட்சம் கோடி ரூபாய் என்று இலக்கு நிர்ணயித்து, இன்றைக்கு ரூ.2,42,160 கோடி முதலீடு என்ற சாதனையைப் படைத்த பின்னாலும், (மேசையைத் தட்டும் ஒலி) "இது எப்போது முடியும்?" என்று ஏகடியம் பேசுகிறார்கள். "ஏன் அறிவிப்போடு நிற்கிறது, ஓராண்டானதே?" என்று கேட்டுவிட்டு, நடக்கவிருந்தபோது "ஆஹா! இது முடியுமா" என்று கேட்டு, முடிந்த பின்னாலே "இது வெறும் சாதனையா? ஏட்டளவு சாதனையா?" என்றெல்லாம் பேசுகின்றார்கள். இன்றைக்கு 4,60,000 குடும்பங்கள், தொழிலாளர்கள் பயன்பெறுகிற வகையிலே ஒரு வரலாற்றுச் சாதனையை மாண்புமிகு அம்மா அவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

அதுவும், சாதாரணத் தொகையா? தேசிய முதலீட்டைவிட இன்றைக்கு தமிழக முதலீடு அதிகரித்திருக்கிறது. நாம் பத்திரிகையிலே செய்தி படிக்கிறோம். மேற்கு வங்க முதலமைச்சர்,

2015 செப்டம்பர் 23] [முனைவர் செ.கு. தமிழரசன்]

ஆந்திர முதலமைச்சர், இராஜஸ்தான் முதலமைச்சர் என்று பிற மாநில முதலமைச்சர்களெல்லாம் உலக அளவிலே போய், ஓடி, ஓடிப் போய், தேடித் தேடிப் போய் "எங்களுடைய மாநிலத்திற்கு தொழில் முதலீடு வேண்டும்" என்று கேட்டபோது, சென்னையிலே, இந்தத் தலைமைச் செயலகத்திலே இருந்துகொண்டே, இவ்வளவு பெரிய சாதனையை, இவ்வளவு பெரிய நடவடிக்கையை, இவ்வளவு பெரிய செயலைச் செய்து முடித்திருக்கிறார்களென்று சொன்னால், நிச்சயமாக இந்தச் செயல் சாதனையாகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆகவேதான், நான் இதை மூன்று கூறுகளாகச் சொல்கிறேன். "செயல் சாதனையாகியிருக்கிறது", ஒரு செயல், அதுவும் தமிழக மக்களின் வளத்தைக் குறித்த செயல்; மாபெரும் எதிர்கால திட்டத்தை அடிப்படையாக வைத்திருக்கிற செயல்; சாதனை படைத்திருக்கிற செயல்; அதற்கும் மேலே இங்கே அவை நிகழ்ந்து கொண்டிருக்கிறபோது, இத்தகைய நடவடிக்கையும், இத்தகைய சாதனையும் அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது பாராட்டப்பட வேண்டியது; பாராட்டுவது இந்த அவையின் கடமை, மரபு. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-50*

சட்டமன்றப் பேரவைக் கூட்டம் நடந்து கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், செயலாகவும், சாதனையாகவும், மரபாகவும் இருக்கக்கூடிய, இந்தச் சாதனை நிகழ்ந்து இருக்கக்கூடிய நிலையில் இந்த அவை நம்முடைய போற்றுதலுக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, செயல், சாதனை, மரபு என்ற மூன்று கூறுகளிலும் இன்றைக்கு மகத்தான பெருமைபடைத்த இந்தத் தீர்மானத்தை நான் வாழ்த்துகிறேன், வரவேற்கிறேன்.

தொழில் இல்லாவிட்டால் இனி வருங்கால சமூகம் இல்லை. அப்படிப்பட்ட ஒரு விஞ்ஞான வளர்ச்சியை, பரிணாமத்தை நாம் பெற்றிருக்கிறோம். மார்க்ஸ் சொன்னார், 'மாற்றம் என்பதுதான் நிரந்தரமானது.' உலகிலே எது நிரந்தரமானது என்று சொன்னால், மாற்றமே நிரந்தரமானது. அந்த மாற்றத்தின் ஒரு மாபெரும் வளர்ச்சி என்பது விஞ்ஞானம். அந்த விஞ்ஞான வளர்ச்சிக்கு வித்திட்டிருக்கிற, இந்தத் தொழில் வளர்ச்சிக்குத் துணை

நின்றிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நடவடிக்கையினால் 4 இலட்சத்து 60 ஆயிரம் குடும்பங்கள் நன்மையடைகின்றன என்று சொன்னால், 40 இலட்சத்து 60 ஆயிரத்திற்கும் அதிகமான கிளைத் தொழில், துணைத் தொழில், அவர்களுடைய குடும்பங்கள் என்கிற வகையிலே, ஏழு கோடி மக்கள் தொகையிலே 40 இலட்சம் பேர் நாளைக்குப் பலனடையப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இது இன்றைய தீர்வு மட்டுமல்ல, நூற்றாண்டுக் காலத்திற்குச் சேர்ந்த ஒரு தீர்வு. ஆகவே, நூறாண்டு பெருமைப்படக்கூடிய வகையிலே, நூறு ஆண்டுகளுக்கு வாழ்த்துகிற வகையிலே, வருங்காலத் தலைமுறை வாழ்த்துகிற முறையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எடுத்திருக்கிற இந்தச் செயலை, சாதனையை நான் அகமகிழ்ந்து, பாராட்டி, வழிமொழிந்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசியல் வரலாற்றில், நிருவாக வரலாற்றில் இல்லாத அளவிற்கு, வரலாற்றுச் சாதனையாக, உலக தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்திக்காட்டி, 2,42,160 கோடி ரூபாய் முதலீடுகளை அள்ளிக் குவித்திருக்கிற தமிழகத்தினுடைய ஒப்பற்ற முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டுகிற நிகழ்வாக, மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் இன்று அரசினர் தனித் தீர்மானமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த அளப்பரிய வரலாற்றுச் சாதனைகளுக்கு நன்றி பாராட்டுகிற இந்தத் தீர்மானத்தை முதற்கண் நான் வரவேற்று வழிமொழிகிறேன்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான நம்முடைய தமிழ்ச் சமூகம் பல்வேறு நிலைகளிலே, தொழில் துறையிலே, மரபு வழி தொழில்களிலிருந்து மீண்டு, இன்று உலகத்தினுடைய நவீன சமூகத்தோடு போட்டி போடக்கூடிய சூழலிலே இருக்கிறது. தமிழ் சமூகத்தை முன்னெடுப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இவ்வளவு பெரிய உலக முதலீட்டாளர்களுடைய மாநாட்டை, 100 கோடி ரூபாய் செலவு செய்து, 1 இலட்சம் கோடி ரூபாய் இலக்காக நிர்ணயித்து, இரண்டு

2015 செப்டம்பர் 23] [திரு. உ. தனியரசு]

மடங்கு கூடுதலாக, 2,42,000-க்கும் மேற்பட்ட கோடி ரூபாயை தருவித்திருக்கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அந்தத் தொகையை, வளர்ந்து வருகின்ற தென் மாவட்டங்களுக்கு, பின்தங்கிய தென் மாவட்டங்களுக்கு, வேலைவாய்ப்பு குறைவாக இருக்கிற தென் மாவட்டங்களுக்கு சிறப்புச் சலுகை தந்து, மாநிலத்தின் பின்தங்கிய நிலையிலுள்ள மாவட்டங்களையும் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பாகுபாடற்ற சமூக நிலையை எடுத்து, அனைத்துப் பகுதி மக்களையும் தொழில் துறையிலே, வேலைவாய்ப்புத் துறையிலே, பொருளாதாரத் துறையிலே, வாழ்வாதாரத் துறையிலே மீட்டெடுக்க வேண்டுமென்று உயர்ந்த சமூக விஞ்ஞானியாகத் திகழ்கிறார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். நாட்டினுடைய பல பகுதிகளுக்கும் தன்னுடைய தொழில் ஆற்றலை, தன்னுடைய வலிமையான தொழில் முதலீடுகளைப் பதிவு செய்வதற்குத் திட்டமிட்டவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

ஆயத்த ஆடை தொழிற்சாலைகள் முன்பு வலிமையாக இருந்தன. கொங்கு மண்டலத்திலே பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும், தொழில்முனைவோர்களுக்கும் வாய்ப்பாக இருந்த திருப்பூர், கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் நீதிமன்ற நடவடிக்கையால் ஒரே கையொப்பத்திலே, சுமார் 1,000 சாய ஆலைகள் மூடப்பட்டு, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே, பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க 200 கோடி ரூபாயைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களை வாழ்வித்து, நம்பிக்கையூட்டிய அரசு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. அப்படி ஜவுளித் துறையிலே, ஆயத்த ஆடைத் துறையிலே, மோட்டார் வாகன உற்பத்தித் துறையிலே, ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் சுட்டிக்காட்டியதைப்போன்று, தொழில் துறையிலே, வாகன ஏற்றுமதித் துறையிலே, இந்தியாவிலேயே, தமிழகம்தான் 70 விழுக்காடு ஏற்றுமதியைச் செய்கின்றது என்ற பெருமையைப் பெற்றுத் தந்த ஒப்பற்ற முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

5 இலட்சம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு.

[திரு. உ. தனியரசு] [2015 செப்டம்பர் 23

இந்தியாவிற்கே விழிப்புணர்வு ஏற்படுத்தி, மத்திய அரசாங்கத்திற்கே விழிப்புணர்வை ஏற்படுத்தி, உலகம் முழுவதும் இருக்கிற முதலீட்டாளர்களுக்கு முதலீட்டை நம்பிக்கையோடு செய்வதற்கு உகந்த ஒரே அரசு, ஒரே மாநிலம் என்றால், அது தமிழ்நாடுதான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) உலகத்திற்குப் பறைசாற்றிய, ஆற்றல்மிகு நிருவாக விஞ்ஞானியாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திகழ்கிறார்கள்.

*பிற்பகல் 12—55*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கையினால், எதிர்கால மாணவர் சமூகம், இளைஞர் சமூகம் நல்ல நிலையை அடையும். மாண்புமிகு அம்மா அவர்கள், உலகளாவிய அளவில், தொழில் துறையில் வளர்ந்து வருகிற விஞ்ஞானம் தமிழ்நாட்டிலும் ஏற்பட வேண்டும் என்பதற்காக, தமிழ்ச் சமூகத்தை மீட்டெடுப்பதற்காக, அனுதினமும் தொண்டாற்றி, அடுக்கடுக்கான திட்டங்களை நாள்தோறும் தருகிறார்கள். மின் பற்றாக்குறை மாநிலமாக இருந்த தமிழகத்தை, மின் மிகை மாநிலமாக உருவாக்கிக் காட்டினார்கள். அதேபோன்று, முதலீட்டாளர்களுக்கு உடனடி அனுமதியைத் தரும் ஒற்றைச் சாளர முறை என்ற புதிய திட்ட; தொழிலாளர்கள், மனித வளத்திற்காக பல்வேறு தொழிற்பயிற்சி நிறுவனங்கள் என எல்லா வகைகளிலும், இந்தியாவிலேயே தமிழகம் முதன்மையானதாகத் திகழ்கிறது. ஆசியாவிலேயே தொழில் தொடங்குவதற்கு உகந்த மாநிலமாக, தொழில் முதலீட்டாளர்களுடைய சொர்க்க பூமியாக தமிழகத்தை உருவாக்கிக் காட்டிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த வரலாற்றுச் சாதனையை பாராட்டுவதற்காகக் கொண்டு வரப்பட்டுள்ள அரசினர் தனித் தீர்மானத்தை நான் மனமாரப் பாராட்டி, வரவேற்று, வழிமொழிகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கடந்த செப்டம்பர் மாதம் 9, 10 ஆம் தேதிகளில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தியதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாராட்டப்பட

2015 செப்டம்பர் 23] [திரு. பி.வி. கதிரவன்]

வேண்டும் என்பதற்காக, அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள அரசினர் தனித் தீர்மானத்தை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனதார வரவேற்கிறது. சொல்லப்போனால், இம்முதலீட்டாளர்கள் மாநாடு, 1 இலட்சம் கோடி ரூபாயை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்டது. ஆனால், தமிழகத்தில் 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாயை முதலீடு செய்ய, கிட்டத்தட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்கள் முன்வந்திருக்கிறார்கள். இதுகுறித்து, மத்திய அரசே, சொல்லப்போனால், பிரதமரே யோசித்துக் கொண்டிருக்கிறார்; தமிழகம் இந்த அளவிற்கு ஒரு நிலையை எடுத்திருக்கின்றது என்பதைப் பாராட்டுகின்றார் என்பதில் எந்தவித மாற்றமும் இல்லை. கிட்டத்தட்ட 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது என்பது சாதாரண விஷயம் அல்ல. தமிழகத்தில் தொழில் தொடங்க முதலீட்டாளர்கள் முன்வருவதால், தமிழகத்திலுள்ள 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று சொன்னால், இதை மனதாரப் பாராட்டுவது நமது கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இந்த முதலீடுகளில் கிட்டத்தட்ட 50 சதவிகிதம் தென் மாவட்டங்களில் முதலீடு செய்யப்படவிருக்கிறது. நீண்ட வருடங்களாக தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி இல்லை; தொழில் வளர்ச்சி வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதை நிறைவேற்றுகிற வகையில், தென் மாவட்டங்களுக்காக 50 சதவிகிதத்திற்குமேல் முதலீடுகளைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்காக இந்த நேரத்தில் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, ஒரு சில கட்சிகளைச் சேர்ந்தவர்கள், இந்த முதலீட்டாளர்கள் மாநாட்டை நான்கு ஆண்டுகளுக்குப் பின்னால் ஏன் நடத்துகிறார்கள் என்ற கேள்வியைக் கேட்கிறார்கள். தேசியத் தலைவர் தெய்வீகத் திருமகனார் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், "தேர்தலைப் பற்றி சிந்திப்பவன் அரசியல்வாதி; மக்களைப் பற்றியும், நாட்டைப் பற்றியும் சிந்திப்பவன் தேசியவாதி" என்று கூறினார். அந்த அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த மக்களைப் பற்றியும், இந்த நாட்டைப் பற்றியும் சிந்திக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் தேர்தலைப் பற்றி சிந்திக்கவில்லை, இந்த மக்களைப்

[திரு. பி.வி. கதிரவன்] [2015 செப்டம்பர் 23

பற்றி சிந்திக்கிறார்கள் என்ற நிலை எதிர்க் கட்சிகளுக்குத் தெரிய வேண்டும் என்பதற்காக, இதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த அடிப்படையில், மரியாதைக்குரிய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற அரசினர் தனித் தீர்மானத்தை, அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி மனதாரப் பாராட்டி, வரவேற்று, வழிமொழிகிறது. நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, என்ன? (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

*பிற்பகல் 1–00*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் முன்மொழியப்பட்டிருக்கின்ற அரசினர் தனித் தீர்மானத்தின்மீது புதிய தமிழகம் கட்சியின் கருத்துகளை அறிமுக நிலையிலேயே முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தத் தீர்மானம், தமிழகத்திற்கு 2 இலட்சத்து 42 ஆயிரத்து 160 கோடி ரூபாய் முதலீடு வரவிருப்பதையும், அதன் காரணமாக 4 இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருப்பதையும், அதற்காக நன்றியினையும், பாராட்டினையும் தெரிவிக்கக்கூடிய தீர்மானமாக இருக்கிறது. தமிழகத்தில் தொழில் வளம் பெருக வேண்டும் என்பதில் நான் மாற்றுக் கருத்து கொண்டவன் அல்ல. அதுவும், தென் தமிழகத்திற்கு தொழில்களே வரக்கூடாது என்று கருதக்கூடியவனும் அல்ல. இன்னும் சொல்லப்போனால், கடந்த 10 ஆண்டுகாலமாக தென் தமிழகத்திற்கு தொழில்கள் வர வேண்டும் என்பதற்காக முன்னோடியாக பல போராட்டங்களை நடத்தியவன். ஆனால், இந்த 2,42,160 கோடி ரூபாய் எந்தெந்த நிறுவனங்கள்மூலமாக, எந்தெந்தத் தொழில்களுக்கு, எந்தெந்தப் பகுதிகளில் வரவிருக்கிறது? (குறுக்கீடுகள்) இல்லை, சொல்லி முடிக்கிறேன். இது கேள்வி பதில். என்னைப் பேசவிடுங்கள். எந்தெந்தப் பகுதிகளில் என்பதை வெள்ளை அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டுமென்பதை நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். (குறுக்கீடுகள்) ஒரு தீர்மானத்தின்மீது பேசுகின்றபோது, அது குறித்த தகவல்கள் இல்லாமல் ஒரு சட்டமன்ற உறுப்பினர் எப்படிப் பேச முடியும்? (குறுக்கீடுகள்) அதைத்தானே நாங்கள் கேட்கிறோம். (குறுக்கீடுகள்) Please. (குறுக்கீடுகள்) கொஞ்சம் அமைதியாக இருங்கள். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, பிறகு பேசுங்கள். அடுத்தது, 4,70,000*

2015 செப்டம்பர் 23] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]
பேருக்கு வேலைவாய்ப்பு அளிப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் மிகவும் detail ஆகப் பேசிக் கொண்டிருக்க வேண்டாம். நீங்கள் உரையை முடியுங்கள். இந்தத் தீர்மானத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா?*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்சாலைகள் வந்தால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, உங்கள் கருத்தை சுருக்கமாகச் சொல்லி உட்காருங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *அந்தத் தொழிற்சாலைகள் வந்தால், அவற்றில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமா, இவற்றில் இட ஒதுக்கீடு உண்டா என்பவை குறித்து ஒரு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்படாமல், அதன்மீது பேசச் சொல்வது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்? (குறுக்கீடுகள்) அதுதான் கேள்வி. இதை வரவேற்றுப் பேசுங்கள் என்று சொன்னால். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் தீர்மானத்தை ஆதரிக்கிறீர்களா என்பதை மட்டும் சொல்லி அத்துடன் அமருங்கள். நீங்கள் ரொம்ப detail ஆகப் பேசுவதெல்லாம் சரியாக வராது.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் ஏற்கெனவே வெள்ளை அறிக்கை வேண்டுமென்று கொடுத்திருக்கிறோம். 2,42,160 கோடி ரூபாய் குறித்தும், 4,70,000 பேருக்கு வேலைவாய்ப்பு அளித்தல் குறித்தும் வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்படாத காரணத்தினாலே, இந்தத் தீர்மானத்தின்மீது வரவேற்றுப் பேசுவதற்குண்டான சூழ்நிலை இல்லாத காரணத்தினாலே, நான் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்கின்றேன்.*

*(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)*

[2015 செப்டம்பர் 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடைபெற்றது நல்ல விஷயம்தான். பாட்டாளி மக்கள் கட்சிக்கு அதில் எந்த மாறுபட்ட கருத்தும் கிடையாது. ஆனால், இதில் ஈட்டப்பட்டுள்ள முதலீடு குறித்த பல ஐயங்களும், சந்தேகங்களும் பல எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு எழுந்து கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால்,* SPIC Urea *தொழிற்சாலை 6,000 கோடி ரூபாய்க்கான திட்டம்; இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட திட்டம், இதில் இடம் பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறது.* MRF tyres *உற்பத்தி செய்யும் 4,500 கோடி ரூபாய் திட்டம், ஏற்கெனவே சிபி அமைப்பால் கடந்த ஆண்டு வெளியிடப்பட்டது. இவையெல்லாம் இவற்றில் இடம் பெற்றுள்ளன. எனவே, இதுகுறித்த ஒரு தெளிவில்லாத சூழநிலையில், இதுகுறித்த வெள்ளை அறிக்கையை வைத்து, இதன்மீது ஒரு நெடிய விவாதத்தை நடத்திய பிறகு, இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கோரி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக இந்த நிலையில் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்து, வெளிநடப்புச் செய்கிறேன்.*

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக வரலாற்றில் முதன்முறையாக, கடந்த செப்டம்பர் 9 மற்றும் 10 ஆம் தேதிகளில், உலகத் தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டை சிறப்பாக நடத்தி, அதன்மூலமாக தமிழகத்திற்கு ரூ.2,42,160 கோடி ரூபாய் முதலீட்டினையும், இதன்மூலமாக, 4,70,000–க்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் உறுதி செய்யக்கூடிய வகையில், இந்த மாநாட்டை சிறப்பாக நடத்திய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் முன்மொழிந்துள்ள இந்தத் தீர்மானத்தை, மனித நேய மக்கள் கட்சி உளமார வரவேற்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)*

2015 செப்டம்பர் 23] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

குறிப்பாக, தொழில்கள் என்றால், சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்கள் என்ற ஒரு நிலையை மாற்றி, மொத்தம் வரக்கூடிய 2,42,160 கோடி ரூபாயில், பாதிக்கும் மேற்பட்டவை, தென் மாவட்டங்களுக்கு வரும், குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்திற்கும் வரும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற நிலையை உருவாக்கி இருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–05

நம் நாட்டினுடைய பிரதமர், ஏறத்தாழ பல நூறு கோடி ரூபாய் செலவழித்து, பல வெளிநாடுகளுக்குச் சென்று, Make in India என்ற பெயரிலே, தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக ஏதேதோ செய்வதாக சொல்லிக் கொண்டிருக்கின்றார். ஆனால், தமிழகத்தில் அமர்ந்துகொண்டே பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாயை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்திற்கு முதலீடாகப் பெற்றுத் தந்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக மீண்டும் பாராட்டி, இந்த அரசினர் தனித் தீர்மானத்தை முழுமையாக ஆதரித்து அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு வாய்ப்பில்லை. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்று, இந்த அவையிலே நீங்கள் நடந்துகொண்ட விதத்திற்கு இதுவே போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நேற்று இந்த அவையிலே நீங்கள் நடந்து கொண்ட விதம் மிகவும் சிறப்பாக இருந்தது. அதனால் உங்களுக்கு இன்று வாய்ப்பில்லை. (குறுக்கீடு) பரவாயில்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)

*வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பில்லை. (குறுக்கீடு) நீங்கள் பேசுவதற்கு நான் வாய்ப்புத் தரவில்லை, நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அரசியல் எதிரிகளுக்கு ஏமாற்றம் ஒன்றையே பரிசாக அளிக்கும் திறன் படைத்த எங்கள் தாய், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஒரு யுகப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)*

*(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவையிலிருந்து வெளியேறினார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் எதிரிகளுக்கு ஏமாற்றம் ஒன்றையே பரிசாக அளிக்கும் திறன் படைத்த எங்கள் தாய், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள், ஒரு யுகப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். அன்னமிடுவது ஒரு பக்கம், அறிவுசார் புரட்சிக்கு அச்சாரமிடுவது மறுபக்கம். எண்ணிலடங்கா திட்டங்கள் இன்னொரு பக்கம். ஏட்டிலடங்கா அரசாணைகள் எட்டுத்திக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) வளர்தமிழ் பூமிக்கு வளர்ச்சி தந்து, இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் தமிழகம்தான் முதலிடம் என்ற இலக்கு ஒன்றுதான் எங்கள் தெய்வத் தாயின் குறிக்கோள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு உருவகம் தந்திருக்கிறது, நமது சாதனைத் தாய் நடத்தி முடித்திருக்கும் சர்வதேச தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு. ஆங்கிலத்திலும், தமிழிலும் உள்ள ஒவ்வோர் எழுத்திற்கும் எத்தனை நல்ல அர்த்தங்கள், வார்த்தைகள் உள்ளனவோ, அவை அத்தனைக்கும் இலக்கணமாகத் திகழ்பவர் எங்கள் தாய்.*

2015 செப்டம்பர் 23] [திரு. பி. தங்கமணி]

(மேசையைத் தட்டும் ஒலி) அன்பு, அம்மா; ஆற்றல், அம்மா; இறை நம்பிக்கை, அம்மா; ஈசன் அருள், அம்மா; உண்மை, அம்மா; ஊண், உறக்கமில்லா உழைப்பு, அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) எளிமை, அம்மா; ஏற்றம், அம்மா; ஐயமிடல், அம்மா; ஒப்பற்ற தலைவி, அம்மா; ஓய்வறியாமை, அம்மா; ஔவையின் அறிவாற்றல், அம்மா; ஃ—ஆய்த எழுத்தின் வலிமை, அம்மா; (மேசையைத் தட்டும் ஒலி) இவை அனைத்தையும் கொண்ட எங்கள் அம்மா அவர்களின் துணிவு, விடா முயற்சி, எதையும் சாதிக்கும் திறன், தமிழகத்தை உச்சிக்கே அழைத்துச் சென்றிருக்கின்றது. தொழில் முதலீட்டாளர்கள் மாநாட்டின் வெற்றிக்காக அல்லும், பகலும் அயராது உழைத்த எங்கள் தாயை, அரசியல் கடந்து பாராட்டாதவர்கள் மனிதர்களே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தின் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் வேலைவாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கின்ற தமிழகத்தினுடைய தெய்வத் தாயை அரசியல் கடந்து பலர் பாராட்டியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

2016—ல் மாண்புமிகு அம்மா அவர்களுக்குக் கிடைப்பது 100—க்கு 100 சதவிகிதம் வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இதைக் குறை கூறுபவர்களுக்கு 100—க்கு 100 சதவிகிதம் வெற்றிடம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—10

'ஆடிக் காற்றில் அம்மியே பறக்குது; இலவம் பஞ்சு எந்த மூலைக்கு?' என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல, இதை எதிர்க்கின்றவர்கள் எல்லாம் காணாமல் போவார்கள் என்பதுதான், 2016 ஆம் ஆண்டு தேர்தலினுடைய வெற்றியாக இருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் நடத்திய அந்த மாநாட்டைப் பார்த்து, பக்கத்து மாநிலங்களில் அதிர்வுகள் தொடங்கி விட்டன; vibrations started. காரணம், பக்கத்து மாநிலமாக இருக்கின்ற கர்நாடக மாநிலத்தில், வரவிருக்கின்ற நவம்பர் மாதம் 23, 24 மற்றும் 25 ஆம் தேதிகளில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்துவதென்று முடிவு செய்து, ஏற்கெனவே தேதியை அறிவித்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே மாநாட்டை நடத்தியதைப் பார்த்து,

[திரு. பி. தங்கமணி] [2015 செப்டம்பர் 23

'நாங்கள் அந்த மாநாட்டை பிப்ரவரி மாதம் நடத்துகிறோம்' என்று சொல்லி, இப்போது அவர்கள் அதைத் தள்ளி வைத்திருக்கிறார்கள். அந்த மாநாட்டை அவர்கள் தள்ளி வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், இந்த அதிர்வு ஆரம்பமாகி விட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதுதான் யதார்த்தமான உண்மை என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் மாநாட்டை தள்ளி வைத்திருப்பதற்குச் சொல்கிற காரணம், மின்சார வெட்டு கடுமையாக இருக்கிறது என்பதுதான். பிப்ரவரி மாதத்தில் ஓரளவிற்கு அது சரியாகும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இங்கே பேசிய எதிர்க்கட்சியினர் எல்லாம், தொழில்கள் கர்நாடகாவிற்குச் சென்றுவிட்டன, கர்நாடகாவிற்குச் சென்றுவிட்டன என்று சொன்னார்கள். ஆனால், அந்த மாநிலத்தினுடைய தொழில் துறை அமைச்சரோ, 'கர்நாடகாவில் கடுமையான மின்சார வெட்டு இருக்கின்றது, அதனால் அந்த மாநாட்டை தள்ளி வைத்திருக்கின்றோம்' என்று சொல்லியிருக்கிறார். அப்படியென்றால், இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகள் எல்லாம் இதை அரசியலுக்காகப் பேசுகிறார்கள் என்பதை, அந்த மாநிலத் தொழில் துறை அமைச்சரின் ஒப்புதல் வாக்குமூலத்திலிருந்தே தெரிந்துகொள்ளலாம் என்பதை இந்தப் பேரவையின் வாயிலாக அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகளை அன்னைத் தமிழகத்திற்கு ஈர்த்து வந்து, அகிலத்தை வியக்க வைக்கும் தாய்; தாய்நாட்டில் தமிழகமே நல்லரசு கொண்டிருக்கும் வல்லரசு என்பதை உரைக்க வைக்கும்; இது சத்தியம்! சத்தியம்! பார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும், மனித குலம் உள்ளளவும், எங்கள் அம்மாவின் ஆட்சியே நீடிக்கும் என்று கூறி, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப் பாராட்டி, எனது தெய்வத் தாயினுடைய பாதத்தினை வணங்கி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புரட்சிகள் படைத்திடும் பூலோக வைகுந்தம் தந்த புத்தொளி, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மணிமகுடத்தில் ஒளிவீசும் சரித்திரப் பொன் ஏட்டின் பதிவு.

2015 செப்டம்பர் 23] [பேரவைத் தலைவர்]

புனித தமிழகத்தை ஜப்பான் ஆக்க, புரிந்துணர்வு ஒப்பந்தங்களால் புதிய வேலைவாய்ப்புகளைப் பன்மடங்காகப் பெருக்க, கின்னஸ் சாதனையில் இடம்பெறும் வகையில், இரண்டே நாளில் 98 ஒப்பந்தங்கள்மூலம், 1991 முதல் 2011 ஆம் ஆண்டு வரை, 20 ஆண்டுக் காலத்தில் ஈர்க்கப்பட்ட மொத்த முதலீட்டைவிட 2,42,160 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்தது, சங்கத் தமிழ் பூமிக்கு வலு சேர்க்கும் இலட்சியத்தின் வெற்றி; சத்தியத் தாயின் சாதனைக்குக் கிடைத்த வெற்றி; அன்னையின்மீது தரணி வைத்துள்ள நம்பிக்கைக்குக் கிடைத்த வெற்றி; தன்னலமில்லா தாய் தமிழர்மீது வைத்துள்ள பாசத்திற்குக் கிடைத்த வெற்றி; தமிழகம் தொழில் துறையில் முன்னிலை பெற, தொண்டுள்ளம் கொண்ட தாய் எடுத்த முயற்சிக்குக் கிடைத்த வெற்றி.

மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலில் வரப்போகும் முதலீடுகள் நம்பிக்கைக் கீற்றுகளை நாடெங்கும் ஊன்றுது; நாளைய நட்சத்திரங்கள் முகமெங்கும் சிரிக்குது; 'இந்தியாவிற்கே வழிகாட்டி அம்மா' என்றே, 'இந்தியாவின் ஒப்பற்ற தலைவி அம்மா' என்றே சொல்லுது. 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்றார் ஔவையார்; Trade Centre–லே முதலீடுகளைப் பெற்றுள்ளார் எங்கள் அன்னையார். 5 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்க இலக்கு; இது இன்னும் பன்மடங்காகப் பெருக வாய்ப்பு.

இளைஞர்களே, தடுக்கும் கற்கள் தாயின் வழிகாட்டுதலால் இனி அகப்படாது; உன்னை வீழ்த்த எதிரிக்கும் வழி புலப்படாது; வெற்றிகள் குவியட்டும்; உன் கரம் பற்றி, உயர்வுக்கு அழைத்துச் செல்ல மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கிறார்கள். GIM–Global Investors' Meet; 'Gun' மாதிரி நடத்திய அம்மாவிற்கு 'win'; (மேசையைத் தட்டும் ஒலி) 'வீண்' எனச் சிலர் சொல்வது 'fun'; 'கண்' கலங்கி எடுக்கிறார்கள் 'run'; (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா! தமிழ்நாடு ஆச்சு number one. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளோடு என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

*ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)*

*மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)*

*ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.*

*ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1–15*

## 6. கவன ஈர்ப்பு

### அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. அர. சக்கரபாணி, திரு. எ.வ. வேலு, திரு. தங்கம் தென்னரசு, திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. ஏ. லாசர், திரு. ப. டில்லி பாபு, திரு. இரா. அண்ணாதுரை, திரு. க. பீம்ராவ், திரு. வீ.பி. நாகைமாலி, திரு. ஆர். ராமமூர்த்தி, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, திரு. அ. அஸ்லம் பாஷா, திரு. எம். ஆறுமுகம், திரு. கே. உலகநாதன், திரு. பி.எல். சுந்தரம், திரு. ந. நஞ்சப்பன், திரு. வெ. பொன்னுப்பாண்டி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.வ. வேலு அவர்கள்.*

***திரு. எ.வ. வேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*